<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

**<u>MCOP. No.282/2024</u>**

ம.சா. 1 தேதி. 12.03.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராணி | க/பெ, | இராமச்சந்திரன். |
| வயது | 75 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

எனது தரப்பில் ஆவணங்களாக சீர்காழி காவல் நிலைய குற்ற எண் 25/2019 முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா.ஆ.1** ஆகவும், TN 51 L 0609 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் **ம.சா.ஆ.2** ஆகவும், வாகன காப்பீட்டு நகல் **ம.சா.ஆ.3** ஆகவும், சீர்காழி அரசு மருத்துவமனை வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை நகல் **ம.சா.ஆ.4** ஆகவும், இறந்த மனுதாரரின் கணவர் இறப்பு சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.5** ஆகவும், வாரிசு சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.6** ஆகவும், வாகன பதிவு சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.7** ஆகவும், 1 முதல் 1 மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகத்தின் (எண்ணிக்கை –4) நகல் **ம.சா.ஆ.8** ஆகவும், 1 முதல் 4 மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை (எண்ணிக்கை – 4) நகல் **ம.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

விபத்தினை நான் நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு வயது 75 என்றால் சரிதான். எனது கணவருக்கு விபத்தின் போது 80 வயது இருக்கும். எங்களுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளார்கள். 2 முதல் 4 மனுதாரர்கள் திருமணம் ஆகி தனித்தனியே வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆகவே 2 முதல் 4 மனுதாரர்களுக்க வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல. எனது கணவர் தான் விபத்தின் போது சைக்கிளில் நடுரோட்டில் சென்று விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய டாட்டா ஏசி வாகனத்தின் ஓட்டுனருக்கு ஓட்டனர் உரிமம் இல்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ஓட்டுனர் உரிமம்இல்லாமல் வாகனத்தை ஓட்டிச்சென்றது காப்பீடு விதிமுறை மீறல் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து எப்போது நடந்தது என்றால் இரவு 10 மணியளவில் நடந்தது. வயோதிகத்தால் எனது கணவருக்கு சரியான கண்பார்வை இல்லை என்றால்

சரியல்ல. எனது கணவர் தான் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் சென்று விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் இரவு காவலர் வேலை பார்த்து வந்தார் என்பதற்கும், மாதம் சம்பளம் ரூ.20,000/- பெற்றுவந்தார் என்பதற்கும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இழப்பீட்டிற்கும், வருமானத்திற்கும் ஏற்ப நஷ்ட ஈடு கோராமல் அதிகமாக நஷ்ட ஈடு கோருகிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன ராமச்சந்திரன் கவனக்குறைவு இருப்பதாலும், 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து காப்பீடு விதிமுறை மீறல் இருப்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>**

**<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>**

**<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>**

**<u>MCOP. No.282/2024</u>**

ம.சா. 2 தேதி. 12.03.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளையராஜா | த/பெ, | முனியாண்டி. |
| வயது | 43 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் 4ம் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

மனுதாரர் ராணி என்பவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள தகவல்கள் வழக்கறிஞர் சொன்னார். நானும் மனுதாரர்களும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் ஆவார்கள். விபத்து சம்பந்தமாக காவல் நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மனுதாரர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.